அமைச்சர் துரைமுருகன் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை! – இன்று

# செங்குன்றம் மிசா. இரா.ஏழுமலை இல்ல மணவிழா!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! ஆ.இராசா – சா.மு.நாசர் – கோவி.செழியன் – மா.சுப்பிரமணியன் – ஆர்.எஸ்.பாரதி – திருச்சி சிவா – சுப.வீரபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, நவ. 7-

செங்குன்றம் மிசா . இரா. ஏழுமலை இல்ல மணவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், ஆ.இராசா எம்.பி. - அமைச்சர்கள் ஆவடி சா.மு. நாசர், மா.சுப்பிரமணியன், அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, திருச்சி சிவா எம்.பி., சுப. வீரபாண்டியன் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துகின்றனர்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் நினைவில் வாழும் செங்குன்றம் மிசா இரா.ஏழுமலை மகன் வழி பெயர்த்தியும், இரா. ஏ.பாபு - கலை வாணி பாபு



ஆகியோரின் மகள் அஞ்சலி பாபு -ஈ.கஜேந்திரன் - இந்திராணி ஆகியோரது புதல்வர் (குற்றவியல் நீதிமன்ற நடுவர் - ராமநாதபுரம்) க.பிரபாகரன் ஆகியோரது திருமண விழா 8.11.2024 நாளை வெள்ளிக்கிழமை காலை 9 முதல் 10.30 மணிக்கு மாதவரம் ஜி.எஸ்.டி.சாலை ராம் லட்சுமி பேரடைசில் நடைபெறுகிறது.

இன்று 7. 11. 2024 வியாழன் மாலை 6.30 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வரவேற்கிறார்.

நா.சேகர், ஆர்.டி.மதன்குமார், பழ.செல்வக்குமார், மு.பகலவன், பெ.சரவ ணன், ஜி.இராஜேந்திரன், ஜெ.ஜெய் மதன், கன்னிகை ஜி. ஸ்டாலின், துரை ரஞ்சித்குமார், நா.ஜெகதீசன், வி.திருமால், தங்கமணி திருமால், சாந்தி பாஸ்கர், தமிழரசி குமார், ஆர்.இ.ஆர். விப்ரநாராயணன், வே.மதிய ழ கன்,

ஏ.திராவிடமணி, செல்வமணி, அருள் தேவநேசன், சந்திரசேகர், சீனிவாசன், கே. கபிலன், முனீஸ்வரி சுகுமார், லெனின்குமார், ஆனந்தன், செல்வக்குமார், முத்துராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நீர்வளத் துறை அமைச்சர் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் ஆவடி சா.மு. நாசர், கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா, சுப. வீரபாண்டியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி பேசுகின்றனர்.

மேலும் மாவட்டச் செயலாளர்கள் ஆர்.டி. சேகர், டி.ஜெ.கோவிந்தராஜன், கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., கனிமொழி என். வி.என்.சோமு எம்.பி., சசிகாந்த் செந்தில் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், தாயகம் கவி, காரம்பாக்கம் கணபதி, கே.பி.சங்கர், ஐ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், ஏ.எம். வி.பிரபாகர் ராஜா, மற்றும் ப.ரங்கநாதன், ஜெ.எம். ஆரூண், துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., அசன் மௌலானா எம்.எல்.ஏ., இ.ஏ.பி. சிவாஜி, டி.செல்வம், பி.எஸ். அமுல்ராஜ், கே.சந்திரமோகன், எம்.வேல் முருகன், வி.அருணாசலம், கே.என்.சேகர், அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ரூபி மனாகரன்,

மிசா. மதிவாணன், வீ.ராமநாதன், குறிஞ்சி எஸ். கணேசன், மு.இராஜசேகர், டி.ராமகிருஷ்ணன், அறிவழகி பாலகிருஷ்ணன், எம். ஆனந்தன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜி, பி.சாந்தி உள்ளிட்ட கழக நிர்வாகி கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; 5.11.2024 அன்று கோவையில் முதல்வர் பங்கேற்ற நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் இசைக்கப்படுவது தவிர்க்கப்பட்டதாக ஒரு நாளேடு 'குசும்பு' செய்திருக்கிறதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; நேற்று கோவையில் 'முதல்வர் கள ஆய்வு' என்றுதான் அறிவிக்கப்பட்டு, அதன்படி நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடந்தன.**

**கள ஆய்வின் முதல் கட்டமாக, தகவல் தொழில் நுட்பப் பூங்கா கட்டிடத்திற்கான கல்வெட்டைத் திறந்துவைத்து, அங்கே அமைய உள்ள மென்பொருள் நிறுவனங்களின் குத்தகைதாரர்களுக்கு இட ஒப்பந்த ஆணைகளை முதல்வர் வழங்கினார்.**

**கள ஆய்வின் இரண்டாவது நிகழ்ச்சியாக, நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டவர்களுக்கு, விடுவிப்பு ஆணைகளை வழங்கினார் முதல்வர்.**

**கள ஆய்வின் அடுத்த கட்டமாக, தொழிலாளர்கள் தங்கும் விடுதிக்கான கட்டுமானப் பணியை ஆய்வு செய்துவிட்டு; கோவை மாவட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகள் மற்றும் அறிவிப்புகளுக்குரிய செயலாக்கம் குறித்தும் முதல்வர் ஆய்வு மேற்கொண்டார்.**

**கள ஆய்வு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து தேசிய கீதம் இசைக்கப்படுவது பொருத்தமில்லாதது.**

**சென்னைத் தலைமைச் செயலகத்தில், பல நாட்களில், ஆணைகளையும், விருதுகளையும், சான்றிதழ்களையும், ஆவணங்களையும், உரியோர்க்கு வழங்கி வருகிறார் முதல்வர். அப்போதெல்லாம் வாழ்த்து கீதங்கள் இசைக்கப்படும் வழக்கம் இல்லை; அதற்குரிய பொருத்தமும் இல்லை.**

**ஆளுநர் நிகழ்ச்சியில் ' திராவிடநல் திருநாடு' தவிர்க்கப்பட்ட கடும் கண்டனத்திற்குரிய சம்பவத்தை, முதல்வரின் கள ஆய்வு நிகழ்வுகளுடன் ஒப்பிடுவது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட முயற்சிக்கும் அறிவீனம் ஆகும் !**

## வலைதளங்களில் வலம் வருவது!




கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

# கம்பம் இரா.பாண்டியன் சகோதரி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

கம்பம், நவ.7-

கழக கொள்கை பரப்பு மாநில துணைச் செயலாளர் கம்பம் இரா.பாண்டியனின் சகோதரி எம்.பரமேஸ்வரி நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்ததும் கழகத் தோழர்கள் அன்னாரது இல்லம் சென்று மறைந்த பரமேஸ்வரி அவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கம்பம் இரா.பாண்டியனின் சகோதரி எம்.பரமேஸ்வரி நேற்று (06-11-2024 - புதன்கிழமை) காலை 9.00 மணி அளவில் தேனி மாவட்டம் கம்பத்தில் காலமானார். தகவல் அறிந்ததும் தேனி மாவட்டம் தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தினர். அன்னாரது நல்லடக்கம் இன்று (07-11-2024 வியாழன்) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறுகிறது.

மழை நீர் வடிகால் பணிகள் – குழாய் அமைக்கும் பணிகள்!

# கிழக்கு கடற்கரைச் சாலை - சில பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, நவ.7-

கிழக்கு கடற்கரை சாலை (ECR) 6 வழி சாலையாக மாற்றப்படுவதால் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் காரணமாக நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் விஜிபி வளாகம் எதிரில் மேற்கொள்ளப்பட உள்ளதால் நேற்று 06.11.2024 மாலை 6 மணி முதல் இன்று 07.11.2024 மாலை 6 மணி வரை (24 மணி நேரம்) அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் 13 (அடையாறு) திருவான்மியூர், பெசன்ட் நகர், கலாசேத்திரா காலனி, இந்திரா நகர் (பகுதி)

மண்டலம் 14 (பெருங்குடி) கொட்டிவாக்கம் மற்றும் பாலவாக்கம்

மண்டலம் 15 (சோழிங்கநல்லூர்) ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை மற்றும் வெட்டுவான்கேணி

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, போதுமான அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

மேலும், கூடுதல் தகவல்களுக்கு 0444567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிக்கை!



திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் சிறப்பு வாக்காளர் சரிபார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் முகாம் பொறுப்பாளர்கள் மற்றும் BLA II – கள், BLC – கள் ஆலோசனை கூட்டம். ஒன்றிய , நகர, பேரூர் வாரியாக கீழ்காணும் தேதிகளில், கீழ்காணும் இடங்களில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரப்படி நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாடு செய்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருவள்ளூர் தொகுதி**
**நாள்: 7-11-2024 வியாழன்கிழமை**

| வ. எண் | நேரம் | கழக நிர்வாகம் | பொறுப்பாளர்கள் | நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 12.00 மணி | திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | சரஸ்வதி சந்திரசேகர், சித்திக் அலி | கூளூர்எம்.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் |
| 2 | 12.30 மணி | திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் | சி.எஸ்.விஜயகுமார், வழக்கறிஞர்அருணகிரி | எஸ்.மகாலிங்கம் ஒன்றிய செயலாளர் |
| 3 | 1.00 மணி | கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் | வழக்கறிஞர் ராயல் பாஸ்கர், ஜே.லூகா | மோ.ரமேஷ் ஒன்றிய செயலாளர் |
| 4 | 1.30 மணி | பூண்டி மேற்கு ஒன்றிய | வி.எஸ்.நேதாஜி, வழக்கறிஞர் ஆர்.ராஜா கோவிந்தம்மாள் | டி.கிறிஸ்டி (எ) அன்பரசு ஒன்றிய செயலாளர் |
| 5 | 2.00 மணி | திருவள்ளூர் நகரம் | வழக்கறிஞர் பி.கே.நாகராஜ், டேனியல், எம்.பன்னீர் செல்வம் | சி.சு.ரவிச்சந்திரன் நகர செயலாளர் |
| 6 | 2.30 மணி | கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | வழக்கறிஞர் வி.எஸ்.சதீஷ், டி.கே.பாபு | க.அரிகிருஷ்ணன் ஒன்றிய செயலாளர் |

**திருத்தணி தொகுதி**
**நாள் : 8-11-2024 வெள்ளிகிழமை**

| வ. எண் | நேரம் | கழக நிர்வாகம் | பொறுப்பாளர்கள் | நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | காலை 9.00 மணி | திருத்தணி கிழக்கு ஒன்றியம் | ம.கிரண், வழக்கறிஞர் யு.தியாகு | கோ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் |
| 2 | காலை 9.30 மணி | திருத்தணி மேற்கு ஒன்றியம் | வழக்கறிஞர் ஹென்றி லாரன்ஸ், கு.பிரபாகரன் | என்.கிருஷ்ணன் ஒன்றிய செயலாளர் |
| 3 | காலை 10.00 மணி | இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம் | ம.புவனேஷ்குமார், வழக்கறிஞர் முரளி | பெ.பழனி ஒன்றிய செயலாளர் |
| 4 | காலை 10.30 மணி | இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம் | டி.எம்.சுகுமாரன், வழக்கறிஞர் அறிவழகன் | சி.என்.சண்முகம் ஒன்றிய செயலாளர் |
| 5 | 11.00 மணி | பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | வழக்கறிஞர் எம்.பொன்னுசாமி, மத்தூர் பன்னீர் | சி.ஜெ.சீனிவாசன் ஒன்றிய செயலாளர் |
| 6 | 11.30 மணி | பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | வழக்கறிஞர் ஆர். முரளி, எஸ்.குமரன் | பி.டி.சந்திரன் ஒன்றிய செயலாளர் |
| 7 | 12.00 மணி | பள்ளிப்பட்டு பேரூர் | கே.எம்.நாகராஜன், வழக்கறிஞர் சீனிவாசன் | சி.ஜெ.செந்தில்குமார் பேரூர் செயலாளர் |
| 8 | 12.30 மணி | பொதட்டூர்பேட்டை பேரூர் | வழக்கறிஞர் என்.குமார், வி.இ.ரவிக்குமார், முரளி சேனா | டி.ஆர்.கே.பாபு பேரூர் செயலாளர் |
| 9 | 1.00 மணி | திருத்தணி நகரம் | வழக்கறிஞர் ராமதாஸ். ஏ.வேதமணி | வி.வினோத்குமார் நகர செயலாளர் |

இந்நிகழ்வில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், , தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் பெ.சேகர், கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிஷேசன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர். வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, பொதுகுழு உறுப்பினர்கள் பா.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், ம.சுப்பிரமணியன், பி.ரஜேஸ்வரிஇரவிந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள், சம்மந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்பாளர்களும் கண்டிப்பாக இக்கூட்டங்களில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

கோவை மாநகர் மாவட்டத்தில்

# பி.எல்.ஏ.2 பூத் கமிட்டி சரி பார்க்கும் பணி!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

கோவை, நவ. 7 -

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மற்றும் கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அவர்கள் வழிகாட்டுதலில், தொகுதி பார்வையாளர்கள் சிங்காநல்லூர் தொகுதி முத்துவேல் ராமசாமி, மாநில அயலக அணி துணைச் செயலாளர்.

கோவை தெற்கு தொகுதி சத்யா பழனிக்குமார், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச்செயலாளர்,

கோவை வடக்கு தொகுதி மு.வாசிம்ராஜா, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச்செயலாளர்

பங்கேற்கின்றனர் என்று கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் அறிவித்துள்ளார்.

கழகத் தலைவர் ஆணைக்கிணங்க, தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி,

பி.எல்.ஏ. 2 மற்றும் பூத் கமிட்டியை சரிபார்க்கும் பணியை இரண்டு கட்டங்களாக தொகுதிப் பார்வையாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என ஆணை பிறப்பித்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக, 8.11.2024 மற்றும் 9.11.2024 ஆகிய இரு தினங்களில், கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட கோவை வடக்கு, கோவை தெற்கு, சிங்காநல்லூர் சட்டப்பேரவை தொகுதிகளின்

பி.எல்.ஏ.2 (பாக முகவர்கள்) ஒவ்வொருவரையும் நேரிடையாக பகுதி வாரியாக, தொகுதி தொகுதிப் பார்வையாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அது வருமாறு:

**கோவை வடக்கு தொகுதி.**

1.வடவள்ளி பகுதி கழகம்- 8.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி- மருதம் விளையாட்டு அரங்கம்.

2. பாப்பநாயக்கன் புதூர் பகுதி கழகம்- 8.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணி- 41வது வட்டக்கழக அலுவலகம்.

3.சாய்பாபா காலனி பகுதி கழகம்- 8.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணி- ஆர்.கே.திருமண மண்டபம், சங்கனூர்.

4.வேலாண்டிபாளையம் பகுதி கழகம்- 9.11.2024 சனிக்கிழமை மாலை 5.00 மணி- ஜவகர்புரம், சித்தி விநாயகர் கோவில் மண்டபம்.

5.கணபதி பகுதி கழகம்- 9.11.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணி- பகுதி கழக அலுவலகம், சாஸ்திரி வீதி, இரத்தினபுரி.

6.மணியகாரன்பாளையம் பகுதி கழகம்- 9.11.2024 சனிக்கிழமை காலை 11.30 மணி- சமுதாயக்கூடம், போலீஸ் காலனி.

**கோவை தெற்கு தொகுதி.**

1.பெரிய கடை வீதி பகுதி கழகம்-1 - 9.11.2024 சனிக்கிழமை காலை 9.00 மணி- அமுத சுரபி ஹால், பூமார்க்கெட்.

2.காந்திபுரம் பகுதி கழகம்- 9.11.2024 சனிக்கிழமை மாலை 5.30 மணி- மாவட்ட கழக அலுவலகம், வட கோவை.

3.ராமநாதபுரம் பகுதி கழகம்- 9.11.2024 சனிக்கிழமை மாலை 6.30 மணி- பகுதி கழக அலுவலகம், ராமநாதபுரம்.

4.பெரிய கடை வீதி பகுதி கழகம்-2 -10.11.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி- கோட்டை, பெருமாள் கோவில் வீதி, தேர்தல் அலுவலகம்.



**சிங்காநல்லூர் தொகுதி.**

1.சிங்காநல்லூர் பகுதி கழகம்-2 - 8.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி- சர்க்கரை செட்டியார் திருமண மண்டபம், இ.எஸ்.அருகில்,வரதராஜபுரம்.

2.சிங்காநல்லூர் பகுதி கழகம்-1 - 8.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி- ஏ.ஆர்.எஸ். கல்யாண மண்டபம், SIHS காலனி.

3.சிங்காநல்லூர் பகுதி கழகம்-3 - 8.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி- சரஸ்வதி நடராஜ திருமண மண்டபம், ராமநாதபுரம், 80அடி ரோடு.

4.பீளமேடு பகுதி கழகம்-2 - 8.11.2024 வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணி- வைஷ்ணவா ஹால், பாநா.பாளையம்.

5.பீளமேடு பகுதி கழகம்-1 - 9.11.2024 சனிக்கிழமை காலை 9.00 மணி

கே.ஆர்.ஹால் கொடிசியா அருகில்.

6.பீளமேடு பகுதி கழகம்-3 - 9.11.2024 சனிக்கிழமை காலை 11.30 மணி-, சொசைட்டி ஹால், சௌரிபாளையம்.

மேற்காணும் பி.எல்.ஏ.2 சந்திப்பு நிகழ்ச்சிகளை பகுதிக்கழக செயலாளர்கள், வட்டக்கழக செயலாளர்களும் ஏற்பாடு செய்யுமாறும்,

பி.எல்.ஏ.2- அனைவரும் குறித்த நேரத்தில் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.]

இவ்வாறு நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | 95, 96, 97 | 3 |
| 2 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | 161 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/4796/ஒப்பந்தப்புள்ளி/2024

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**கட்டடத்துறை** க.து.ந.க.எண்.பி1 / 2427 / 2024

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Construction of Various types of buildings at **Zone - I, II, III, IV, V, VI and VIII (TWO COVER SYSTEM) (VCVT),** Construction of Community Hall Building at Gandhiji Street in Div - 44, Zone - 04 **(NNT FUND),** Request for Proposal for the Selection of Firms(s) for Third Party Audit and Quality Assessment of Building Works **and** Third Party Inspection and Testing of Electrical Installation. **(18 சிப்பங்கள்)**

**அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.749.08 இலட்சம் குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.209.65 இலட்சம்**
**முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பு தொகையில் 1%**

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **04.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி வரை**
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **05.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 4791 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**